

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (28.8.2023) முகாம் அலுவலகத்தில், ஹஜ் புனித பயணம் செல்வதையொட்டி சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் தனது மனைவியுடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# ‘இந்தியா’ கூட்டணியில் மேலும் சில கட்சிகள் சேரும்!

## பீகார் முதல்வர் நிதிஷ் குமார் தகவல்!



பாட்னா, ஆக. 29 - எதிர்க்கட்சிகளின் ‘இந்தியா’ கூட்டணியில் மேலும் சில கட்சிகள் இணைய இருப்பதாக பீகார் முதல்வர் நிதிஷ் குமார் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு நடக்க உள்ள மக்களவை தேர்தலில் பா.ஜ.வை எதிர்த்து போட்டியிட காங்கிரஸ், தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ், ஐக்கிய ஜனதா தளம் உள்ளிட்ட 26 கட்சிகள் ஓரணியில் இணைந்துள்ளன. இக்கூட்டணிக்கு ‘இந்தியா’ என பெயரிடப்பட்டுள்ளது. இதன் ஆலோசனைக் கூட்டம் பாட்னாவிலும், பெங்களூருவிலும் நடந்துள்ளது.

இதைத் தொடர்ந்து 3வது ஆலோசனைக் கூட்டம் மும்பையில் வரும் 31 மற்றும் செப்டம்பர் 1ம் தேதி நடக்க உள்ளது.

இதுகுறித்து பாட்னாவில் பேட்டி அளித்த பீகார் முதல்வர் நிதிஷ் குமார், “மும்பையில் நடக்கும் ஆலோசனைக் கூட்டத்தில், மக்களவை தேர்தலுக்கான உத்திகள் குறித்து விவாதிப்போம்.

மேலும், தொகுதி பங்கீடு தொடர்பான விஷயங்களை இறுதி செய்வது குறித்தும் விவாதிக்க திட்டமிடப்பட்டுள்ளது. எங்களின் இந்தியா கூட்டணியில் மேலும் சில கட்சிகள் இணைய உள்ளன. 2024 மக்களவை தேர்தலுக்கு முன்பாக அதிகபட்ச கட்சிகளை ஒன்றிணைக்க விரும்புகிறேன். அந்த திசையிலேயே நான் செயல்படுகிறேன். மற்றபடி எந்த பதவி மீதும் எனக்கு ஆசை இல்லை” என்றார்.

இதற்கிடையே, நாக்பூரில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த காங்கிரஸ் கட்சியின் செய்தி தொடர்பாளர் அலோக் சர்மா, பாரதிய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியைச் சேர்ந்த நான்கைந்து கட்சிகள் ‘இந்தியா’ கூட்டணியில் சேரும் என்று தெரிவித்தார்.

### அர்ச்சகர்கள் நியமனம் தொடர்பான

# தமிழ்நாடு அரசின் அரசாணைக்கு தடை விதிக்க உச்சநீதிமன்றம் மறுப்பு!

சென்னை, ஆக. 29- அர்ச்சகர்கள் நியமனம் தொடர்பான தமிழ்நாடு அரசின் அரசாணைக்கு தடை விதிக்க உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டது.

கோயில்களில் அர்ச்சகர்கள் மற்றும் ஆகமம் சம்பந்தப்பட்ட பணியாளர்களை நியமிக்க தடை விதிக்கக் கோரி ஆதி சைவ சிவாச்சாரியார்கள் நலச்சங்கம் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

தமிழ்நாடு இந்து சமய நிறுவன ஊழியர்களுக்கான சேவை விதிகள், 2020ன் கீழ் கடந்த 2020ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வெளியிட்ட அரசாணைக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் அந்த மனுவில் கோரப்பட்டது. அந்த மனுக்களை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

இதனைத் தொடர்ந்து ஆதி சைவ சிவாச்சாரியார்கள் நலச் சங்கம் சார்பில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த மனு, நீதிபதிகள் எம்.எம்.சுந்தரேஷ், ஜெ.பி.பர்திவாலா அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர்கள் தரப்பில் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுக்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும் என கோரப்பட்டது.

ஆனால், இதனை ஏற்க நீதிபதிகள் மறுத்துவிட்டனர். மேலும், இந்த மனு தொடர்பாக தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை பதில் மனு தாக்கல் செய்யவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

### ரெட்டியார்சத்திரம் வடபுற கிராமங்களின் குடிதண்ணீர் பஞ்சத்தைப் போக்க

# தேவர் மலையில் உயர்நிலை, மேல்நிலை தண்ணீர் தொட்டி கட்டப்படும்!

## அழகுபட்டியில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!



சின்னாளபட்டி, ஆக. 29 - ரெட்டியார்சத்திரம் வடபுற கிராமங்களின் குடிதண்ணீர் பஞ்சத்தை போக்க தேவர் மலையில் பிரம்மாண்ட மேல்நிலை தண்ணீர் தொட்டி கட்டப்படும் என்று அழகுபட்டியில் நடைபெற்ற நியாய விலை கடை திறப்பு விழாவில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

திண்டுக்கல் ரெட்டியார் சத்திரம் ஒன்றியம் அழகுபட்டி ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.15.5லட்சம் மதிப்பில் புதிய நியாயவிலை கடை திறப்புவிழா நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் மொ.ந.பூங்கொடி தலைமை தாங்கினார். திண்டுக்கல் எம்.பி.ப.வேலுச்சாமி, ஒன்றிய பெருந்தலைவர் ப.க. சிவகுருசாமி, திண்டுக் கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்திய மூர்த்தி, ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சிமன்ற தலைவர் அருணாதேவி கந்தசாமி வரவேற்று பேசினார். விழாவில் புதிய நியாய விலைக்கடையை திறந்து வைத்து பயனாளிகளுக்கு ரேஷன் பொருட்களை வழங்கிய பின்பு பொதுமக்கள் மத்தியில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ. பெரியசாமி பேசும் போது திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வண்ணம் நூறுநாள் வேலை திட்டத்தில் சராசரியாக பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் தலா 32 நாட்கள் கூடுதலாக கிடைக்கும்படி செய்துள்ளார். இதன்மூலம் தமிழகத்தில் உள்ள 12ஆயிரத்து 500 கிராம ஊராட்சிகளில் உள்ள பயனாளிகள் பயன் பெறுகிறார்கள்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் போது மத்தியில் ஆண்ட பா.ஜ.க. அரசு 100நாள் வேலை திட்டத்தை முடக்கும் வண்ணம் அதற்குரிய நிதியை கட்டிடங்களுக்கும், வடிகாலுக்கும் பயன்படுத்தி வந்தது. தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு அதை நிறுத்திவிட்டு தற்போது பயனாளிகள் பயன் பெறும் வகையில் நடவடிக்கை எடுத்துள்ளார். இப்பகுதியில் உள்ள கிராமங்களின் குடிதண்ணீர்; பஞ்சத்தை போக்க மாபெரும் உறை கிணறுகள் அமைக்கப்பட்டு அதன்மூலம் தண்ணீர்; எடுக்கப்பட்டு தேவர் மலையில் மிகபிரம்மாண்டமான பல லட்சம் தண்ணீர்; கொள்ளவு கொண்ட மேல்நிலை தண்ணீர் தொட்டி கட்டப்பட்டு குடிதண்ணீர் விநியோகம் செய்யப்படஉள்ளது.

நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு அவர்களை அழைத்து வந்து அந்த இடத்தை பார்வையிட்ட பின்பு இந்த திட்டம் செயல்படுத்த உள்ளது. அனைத்து குடும்பத் தலைவிகளுக்கும் செப்டம்பர் 15ம் தேதி முதல் மாதந்தோறும் ரூ.1000 கிடைக்கப்போகிறது. இதன்மூலம் கிராமப்புற ஏழைகளின் வாழ்வாதாரம் உயரும் என்றார். அழகுபட்டியைச் சேர்ந்த கிராம மக்கள் தெருவிளக்கு மற்றும் சாலை வசதி கேட்டுள்ளார்கள். அவர்களின் கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படும் தமிழக முதல்வர் அவர்கள் திண்டுக்கல் மாவட்டத்திற்கு சாலை வசதிக்காக ரூ.600கோடி ஒதுக்கியுள்ளார்கள். அதில் ரெட்டியார்சத்திரம் மற்றும் ஆத்தூர் ஒன்றியத்திற்கு மட்டும் ரூ.150கோடி ஒதுக்கீடு செய்துள்ளேன். இதன் மூலம் ஆத்தூர் தொகுதியில் மண் சாலைகள் இல்லாத நிலை ஏற்படப் போகிறது என்றார்.

நிகழ்ச்சியில் தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ப.ராஜேஸ் பெருமாள், திமுக நிர்வாகி அம்பைரவி, மாவட்ட வழங்கல் அலுவலர் சிவக்குமார், பொது விநியோக திட்ட துணைப்பதிவாளர் இரா.அன்புக்கரசன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மலரவண், கிருஷ்ணன், கூட்டுறவு சார்பதிவாளர் அன்பரசு, ஒன்றிய துணைப்பெருந் தலைவர் ராஜேஸ்வரி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சுப்புலெட்சுமி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணிதுணைஅமைப்பாளர் பண்ணைப்பட்டி அருண் ஜெகநாதன், ஊராட்சி மன்ற துணைத்தலைவர் சிவகாமி, ஒன்றிய குழு உறுப்பினர்கள் மருதாயம்மாள் முருகன், சுமதி கணேசன், நாகலெட்சுமி ரமேஷ், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் அண்ணாதுரை, கதிரயன்குளம் பாலன், கொத்தப்புள்ளி ஊராட்சிமன்ற துணைத்தலைவர் ரெங்கசாமி, மாணவரணி அமைப்பாளர் செல்வம், கே. புதுக்கோட்டை ஊராட்சி செயலாளர் ராஜேந்திரன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள், இளைஞர் அணியினர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

நிறைவாக ஊராட்சி செயலாளர் தனலெட்சுமி நன்றிகூறினார்.

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் வருகிற 04.09.2023 - திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் உத்திர மேரூர் இந்திராணி மகாலில் மாவட்டக் கழக அவைத் தலைவர் ச.இனியரசு தலைமையிலும் மாவட்ட துணை செயலாளர்கள் க.செல்வம் எம்.பி., டி.வி.கோகுலகண்ணன், கு.மலர்விழி, மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

எனவே, இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் - தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - நகர- ஒன்றிய - பகுதி - பேரூர் செயலாளர்கள், மாநில, மாவட்டக் கழக அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:** செப். 15 பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழா.

கழக ஆக்கப் பணிகள்.

**க.சுந்தர் எம்.எல்.ஏ.,**
செயலாளர்
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.





